ஞாயிற்றுக்கிழமை, அரசு விடுமுறை நாட்களில்

# மெட்ரோ ரெயில்கள் காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை இயக்கம்

## இன்று முதல் அமலுக்கு வருகிறது

சென்னை, ஜூலை.18-

சென்னை, மெட்ரோ ரெயில் பயணிகளின் வேண்டுகோளுக்கு இணங்கவும், வசதிக்காகவும் மெட்ரோ ரெயில் சேவைகள் ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு பொது விடுமுறை நாட்களில் காலை 7 மணி முதல் இரவு 9 மணிக்கு பதிலாக கூடுதலாக ஒரு மணி நேரம் அதாவது இரவு 10 மணி வரை இயக்கப்படும் திட்டம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) முதல் அமலுக்கு வருகிறது. மெட்ரோ ரெயில் சேவைகள் ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசு பொது விடுமுறை நாட்களில் 10 நிமிட இடைவெளியில் இயக்கப்படும்.

மெட்ரோ ரெயில் நிலையங்கள் மற்றும் ரெயில்களில் பயணிகள் முக கவசம் அணியாவிட்டாலோ அல்லது முக கவசத்தை சரியாக அணியவில்லை என்றாலோ ரூ.200 அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது. கடந்த மாதம் 21-ந் தேதியில் இருந்து தற்போது வரை 46 பயணிகளிடம் இருந்து ரூ.9 ஆயிரத்து 200 வசூலிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 21-ந் தேதியில் இருந்து கடந்த 15-ந் தேதி வரை 12 லட்சத்து 37 ஆயிரம் பயணிகள் ரெயிலில் பயணம் செய்து உள்ளனர். அதிகபட்சமாக கடந்த 16-ந் தேதி 69 ஆயிரத்து 794 பயணிகள் பயணம் செய்து உள்ளனர்.